COMPLETE
STUDY
MATERIAL

**CHANDRU MATHS**

# STATIC GK

## *SELF STUDY GUIDE*

CHANDRU MATHS

**ஆக்கம்**

**அரிஹரன்**

**SSC, RRB, CAPF, AGNIVEER உள்ளிட்ட அனைத்து மத்திய அரசு பணித்தேர்வுகளுக்கும்!**

**TNPSC, TNUSRB, TNFUSRB, TRB உள்ளிட்ட அனைத்து மாநில அரசு பணித்தேர்வுகளுக்கும்!!**



CHANDRU MATHS

# முகவுரை

போட்டித் தேர்வர்களுக்கு வணக்கம்!!!

போட்டித்தேர்வுகளில் STATIC GENERAL KNOWLEDGE இன் பங்கு மிக முக்கியமானது. அரசு பணித்தேர்வுகளில் வெற்றிபெற GENERAL STUDIES மட்டுமல்லாமல் மேலும் சில பொதுவான தகவல்களையும் (STATIC GK) தெரிந்துகொள்ள வேண்டியுள்ளது. வழக்கமாக நாம் படிக்கும் வரலாறு உள்ளிட்ட பாடங்களை பயிலும்பொழுது அதில் மனப்பாடம் செய்ய வேண்டிய தகவல்கள் குறைவாகவும் புரிந்துகொள்ளக்கூடியவை அதிகமாகவும் இருக்கும். ஆனால், STATIC GENERAL KNOWLEDGE பகுதியில், சற்றேறக்குறைய அனைத்து தகவல்களுமே மனப்பாடம் செய்யவேண்டி இருக்கும். இருப்பினும் வரலாறு, புவியியல், அரசியலமைப்பு, பொருளாதாரம் மற்றும் அறிவியல் உள்ளிட்ட இதர பகுதிகளை நன்கு புரிந்துகொண்டு உள்வாங்கி படித்தபின் STATIC GENERAL KNOWLEDGE புத்தகத்தினை படித்தால் மனப்பாடம் செய்யவேண்டிய தேவை குறைந்துவிடும். அதேபோல் STATIC G.K. பகுதி எத்தனை காலம் ஆனாலும் மாறாதது என்பதால், ஒருமுறை படித்து மனதில் நிறுத்திவிட்டால் போதும் அதன்பிறகு வரக்கூடிய அனைத்து தேர்வுகளுக்கும் பயனளிக்கும். மத்திய மற்றும் மாநில அரசுகள் நடத்தும் போட்டித் தேர்வுகளை மையப்படுத்தி வெளியிடப்பட்டுள்ள இந்நூலினை முழுமையாக பயன்படுத்திக் கொண்டால் இப்பகுதிகளிலிருந்து கேட்கப்படும் வினாக்களில் 100% முழு மதிப்பெண்களை பெற இயலும். இப்புத்தகத்தினை சிறந்த முறையில் பயன்படுத்தி தேர்வில் வெற்றிபெற வாழ்த்துக்கள்!

CHANDRU MATHS

# சமர்ப்பணம்!!!

**என்னை இவ்வுலகத்திற்கு அறிமுகப்படுத்திய**

**என் பெற்றோர்**

**சீனுவாசன் – மல்லிகா அவர்களுக்கும் !**

**நிறைகுறைகளை கடந்து என்னோடு பயணித்துவரும்**

**எனது மனைவி தமிழரசி அவர்களுக்கும் !!**

**இந்த நூலினை எழுத வாய்ப்பும் ஊக்கமும் அளித்த**

**திரு.சந்திரசேகர் அவர்களுக்கும் !!!**

CHANDRU MATHS

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | **இந்தியா** | |
| 1. | இந்தியா அடிப்படை தகவல்கள், புள்ளிவிவரங்கள் | 1 |
| 2. | இந்தியா மாநிலங்களின் விவரங்கள் | 4 |
| 3. | இந்திய யூனியன் பிரதேசங்கள் | 20 |
| 4. | இந்திய மாநிலங்களின் அலுவல்பூர்வ விலங்குகள், பறவைகள், மலர்கள் மற்றும் பட்டாம்பூச்சிகள் | 21 |
| 5. | இந்திய பாதுகாப்பு படைகள் | 24 |
| 6. | இந்திய பாதுகாப்பு படைகளின் பயிற்சி ஒத்திகைகள் | 29 |
| 7. | இந்தியாவின் முக்கிய அமைப்புகள் | 31 |
| 8. | முக்கிய கலாச்சார அமைப்புகள் | 32 |
| 9. | இந்திய விண்வெளிதுறை | 33 |
| 10. | இந்தியாவின் ஏவுகணைகள் – ஒரு பார்வை | 36 |
| 11. | இந்தியாவின் முக்கிய ஆராய்ச்சி மையங்கள் | 38 |
| 12. | இந்தியாவின் முக்கிய கோவில்கள் | 44 |
| 13. | முக்கிய சின்னங்கள் | 47 |
| 14. | இந்தியாவில் உள்ள யுனெஸ்கோ பாரம்பரிய தளங்கள் | 49 |
| 15. | யுனெஸ்கோவினால் அங்கீகரிக்கபட்ட அரூபமான இந்திய கலாச்சார பாரம்பரியங்கள் | 50 |
| 16. | யுனெஸ்கோவின் படைப்பாக்க இந்திய நகரங்கள் | 51 |
| 17. | இந்தியாவில் உள்ள ராம்சார் பகுதிகள் | 52 |
| 18. | ஐந்தாண்டு திட்டங்கள் | 54 |
| 19. | இந்தியாவிலுள்ள உயிர்கோள காப்பகங்கள் | 55 |
| 20. | புலிகள் காப்பக பட்டியல் | 56 |
| 21. | இந்தியாவிலுள்ள யானைகள் காப்பகங்கள் பட்டியல் | 58 |
| 22. | இந்திய பறவைகள் சரணலாயங்கள் பட்டியல் (மாநில வாரியாக) | 59 |
| 23. | இந்தியாவின் புகழ்மிக்க அருங்காட்சியகங்கள் | 60 |
| 24. | இந்திய விமான நிலையங்கள் | 63 |
| 25. | இந்தியாவின் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் | 67 |
| 26. | இந்தியாவிலுள்ள மகாரத்னா, நவரத்னா மற்றும் மினிரத்னா நிறுவனங்கள் | 68 |
| 27. | இந்தியாவின் எல்லைகள் | 71 |
| 28. | இந்தியாவின் அண்டை நாடுகள் குறித்த விவரங்கள் | 72 |
| | **உலகம்** | |
| 1. | ஐக்கிய நாடுகள் சபை | 78 |
| 2. | ஐ.நா. சபையின் முகமைகள் | 81 |
| 3. | ஐ.நா. சபை அறிவித்த முக்கிய ஆண்டுகள் | 84 |
| 4. | சர்வதேச அமைப்புகள் | 86 |
| 5. | உலக நாடுகளின் தலை நகரங்கள் மற்றும் கரன்சிகள் | 91 |
| 6. | உலக வரலாற்றின் முக்கிய ஆளுமைகள் | 96 |
| 7. | உலக வரலாற்றில் முக்கிய நிகழ்வுகள் | 101 |


CHANDRU MATHS

| | | |
|---|---|---|
| **வரலாறு** | | |
| 1. | இந்திய அரச வம்ஸங்கள் மற்றும் தலைநகரங்கள் | 104 |
| 2. | முக்கிய படையெடுப்பாளர்கள் மற்றும் பயணிகள் | 106 |
| 3. | இந்திய தேசிய காங்கிரஸ் மாநாடுகள் | 109 |
| 4. | இந்திய தேசிய காங்கிரஸ் தலைமைகள் | 109 |
| 5. | விடுதலை போராட்ட காலத்தில் வெளிவந்த இதழ்கள் | 111 |
| 6. | இந்திய வரலாற்றின் முக்கிய ஆண்டுகள் | 111 |
| **அரசியலமைப்பு** | | |
| 1. | இந்தியாவின் முதன்மைகள் மற்றும் முக்கிய சரத்துகள் | 114 |
| 2. | இந்திய அரசியல் சாசன விதிகள், பகுதிகள் மற்றும் பிரிவுகள் | 116 |
| 3. | அரசியலமைப்பின் அட்டவணைகள் | 116 |
| 4. | இந்திய அரசியலமைப்பு சாசனத்தின் மூலாதாரங்கள் | 118 |
| 5. | இந்தியாவின் சில முக்கிய அரசியலமைப்புத் திருத்தச்சட்டங்கள் | 118 |
| **புவியியல்** | | |
| 1. | கண்டங்கள் ஒரு பார்வை | 121 |
| 2. | பெருங்கடல்கள் & பேராழிகள் | 123 |
| 3. | உலக மலைகள், சிகரங்கள் மற்றும் எரிமலைகள் | 124 |
| 4. | உலக ஆறுகள் | 125 |
| 5. | முக்கிய நீர்வீழ்ச்சிகள், ஏரிகள், பாலைவனங்கள், தீவுகள், உலக அதிசயங்கள் | 126 |
| 6. | இந்திய மண்வளம் மற்றும் விளையும் பயிர்கள் | 128 |
| 7. | பயிர் விளைச்சலில் இந்தியாவின் முதன்மை மாநிலங்கள் | 129 |
| 8. | உலக அளவில் பயிர்விளைச்சல் குறித்த தகவல்கள் | 130 |
| 9. | இந்திய நதிகள் ஒரு பார்வை | 130 |
| 10. | இந்தியாவின் கனிம வளங்கள் | 131 |
| 11. | இந்திய துறைமுகங்கள் & கப்பல் கட்டும் இடங்கள் | 132 |
| 12. | இந்திய அனல்மின், அணுமின் மற்றும் நீர்மின் நிலையங்கள் | 133 |
| 13. | முக்கிய பல்நோக்கு ஆற்றுத் திட்டங்கள் | 134 |
| 14. | இந்தியாவிலுள்ள குகைகள், புல்வெளிகள், பனிப்பாறைகள் | 135 |
| 15. | முக்கிய ஜலசந்திகள் | 137 |
| 16. | இந்திய கடற்கரைகள் | 139 |
| 17. | இந்தியாவின் முக்கிய கணவாய்கள் மற்றும் சுரங்கப்பாதைகள் | 141 |
| 18. | இந்தியாவின் நீளமான பாலங்கள் | 144 |


CHANDRU MATHS

| | | |
|---|---|---|
| | **விளையாட்டு** | |
| 1. | முக்கிய விளையாட்டுகள் | 145 |
| 2. | முக்கிய விளையாட்டுகளில் நடப்பு சாம்பியன்கள் | 146 |
| 3. | விளையாட்டில் பரிசளிக்கப்படும் முக்கிய கோப்பைகள் | 147 |
| 4. | இந்திய விளையாட்டு அரங்கங்கள் | 148 |
| 5. | விளையாடும் இடங்களின் அளவுகள் | 149 |
| 6. | ஒலிம்பிக் போட்டிகள் | 149 |
| 7. | ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியாவின் மைல் கல்கள் | 150 |
| 8. | ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற இந்தியர்கள் | 151 |
| | **அறிவியல் & தொழில்நுட்பம்** | |
| 1. | இயற்பியலாளர்கள் மற்றும் அவர்களின் பங்களிப்புகள் | 152 |
| 2. | முக்கிய கண்டுபிடிப்புகள் | 153 |
| 3. | பல்வேறு துறைகளும் அவற்றிற்கான படிப்புகளும் | 157 |
| 4. | சிறப்புப் பெயர்கள் | 158 |
| 5. | சில முக்கியக் கலவைகளும் அவற்றின் கூட்டுப் பொருட்களும், சில அமிலங்களின் இயற்கை மூலங்கள், சில பொதுவான பொருட்களின் **pH** மதிப்புகள், கதிரியக்க ஐசோடோப்புகளின் மருத்துவப் பயன்கள், பன்னாட்டு அலகுகள் | 158 |
| 6. | சேர்மங்களின் வேதிபெயர்கள், சேர்மங்களின் பொதுப்பெயர்கள், தனிம வரிசை அட்டவணை தொகுதிகள், காரங்களின் வேதிப்பெயர், காரங்களின் பயன்கள், பல்வேறு பொருட்களில் **pH** அளவீடு, வேதி உரங்களின் பகுதி பொருட்கள் | 161 |
| 7. | நோய்கள்<br>காற்றின் மூலம் பரவும் நோய்கள், நீரின் மூலம் பரவும் நோய்கள், நுண்ணுயிரிகளால் மனிதனுக்கு ஏற்படும் நோய்கள், பாலியல் தொடர்பு மூலம் பரவும் நோய்கள், கடத்தி மூலம் பரவக்கூடிய நோய்கள் | 163 |
| 8. | வைட்டமின்கள் (நீரில் கறைவன, கொழுப்பில் கறைவன) | 164 |
| 9. | உடலுக்கு தேவையான பெரும் தனிமங்கள் மற்றும் நுண்தனிமங்கள் | 165 |
| 10. | ஊட்டச்சத்து குறைபாடினால் ஏற்படும் நோய்கள், தாவரங்களிலிருந்து பெறப்படும் மருந்துகள் | 166 |
| 11. | சில முக்கிய சேர்மங்களின் தொழிற் பெயர்கள் | 166 |
| 12. | சில சிறப்பு தனிமங்கள் | 168 |
| 13. | முக்கிய அறிவியல் கருவிகள் | 168 |
| | **பல்வகை பொதுஅறிவு தகவல்கள்** | |
| 1. | உலக அளவில் புகழ்மிக்க புனைப்பெயர்கள் | 171 |
| 2. | இந்திய அளவில் புகழ்மிக்க புனைப்பெயர்கள் | 172 |
| 3. | உலக நாடுகளின் தேசிய மலர்கள், ஆண்டு நிறைவு விழாக்கள், முக்கிய எண்ணெய் வயல்கள் | 173 |
| 4. | புகழ்மிக்க கோட்டைகள், முக்கிய மனிதர்களும் அவர்களால் புகழடைந்த இடங்களும், கோடை வாழிடங்கள், இந்தியாவின் முக்கிய மலைச்சிகரங்கள் | 174 |
| 5. | இந்திய முதன்மைகள் | 176 |
| 6. | இந்தியப் பெண் முதன்மைகள் | 178 |
| 7. | இந்தியப் பெண் ஆளுநர்கள் – (1947 முதல்) | 179 |


CHANDRU MATHS

| | | |
|---|---|---|
| 8. | இந்தியப் பெண் முதலமைச்சர்கள் | 180 |
| 9. | முக்கிய அமைப்புகளும் அவற்றின் நிறுவனர்களும் | 180 |
| 10. | இந்திய நதிக்கரை நகரங்கள், அயல்நாட்டு நதிக்கரை நகரங்கள், உலக அளவிலான இயற்கை எரிவாயு மற்றும் கச்சா எண்ணெய் உற்பத்தியில் முதல் 10 நாடுகள், நதிகளின் மாற்றுப் பெயர்கள் | 181 |
| 11. | துறைகளின் முன்னோடிகள் (தந்தைகள்), நோபல் பரிசு பெற்ற இந்தியர்கள், தேசியச் சின்னங்கள், இயற்பெயர்கள் | 182 |
| 12. | நாடுகளின் பழைய பெயர்கள், முக்கிய நாடுகளும், பாராளுமன்றப் பெயர்களும், சிறப்புப் பெயர்கள், பழங்குடிகளும், வாழிடங்களும் | 184 |
| 13. | முதன்மைகள் | 187 |
| 14. | உலகின் சிறப்பு மிகுந்தவை | 188 |
| 15. | முக்கிய எல்லைக்கோடுகள், புதிதாகக் கண்டறியப்பட்ட நாடுகள், குறியீடுகள், இந்தியாவின் முக்கிய மதங்கள் | 191 |
| 16. | அயல் நாட்டு நகரங்களும் அவற்றின் தொழில்களும், இந்தியாவில் உள்ள முக்கியமான இடங்கள், உலகத்திலுள்ள முக்கியமான இடங்கள் | 192 |
| 17. | படுகொலை செய்யப்பட்ட உலகத் தலைவர்கள் | 194 |
| | **தேசிய மற்றும் சர்வதேச விருதுகள்** | |
| 18. | தேசிய விருதுகள் | 195 |
| 19. | சர்வதேச விருதுகள் | 196 |
| 20. | முக்கியமான புரட்சிகள் | 197 |
| 21. | தலைவர்கள் மற்றும் அவர்களின் நினைவிடங்கள் | 198 |
| 22. | முக்கிய அணைகள் மற்றும் ஆறுகள் | 199 |
| 23. | புகழ்பெற்ற இந்திய தலைவர்கள் மற்றும் அவர்களின் புனைப்பெயர்கள் | 199 |
| 24. | இந்திய விளையாட்டு வீரர்கள் மற்றும் அவர்களின் புனைப்பெயர்கள் | 201 |
| 25. | அறிக்கைகள்/குறியீட்டெண்கள்/தரவரிசைகள் மற்றும் அவற்றை வெளியிடும் அமைப்புகள் | 202 |
| 26. | முக்கியமான புத்தகங்கள் & ஆசிரியர்கள் | 206 |
| 27. | முக்கிய தினங்கள் | 211 |
| 28. | முக்கிய விரிவாக்கங்கள் | 218 |
| 29. | உலகின் சிறப்பு மிகுந்தவை | 222 |
| 30. | இந்திய நடனங்கள் | 227 |
| 31. | இந்திய பாரம்பரிய நடனங்களில் புகழ்பெற்ற கலைஞர்கள் | 230 |
| 32. | முக்கிய இசை கருவிகள் மற்றும் கலைஞர்கள் | 230 |
| 33. | இந்திய மாநிலங்களும் அவற்றின் விழாக்களும் | 232 |
| 34. | முக்கிய விழாக்கள் மற்றும் கண்காட்சிகள் | 234 |
| 35. | மாநில வாரியான நீர்வீழ்ச்சிகள் | 236 |
| 36. | தேசிய பூங்காக்கள் மற்றும் வனவிலங்கு சரணாலயங்கள் | 237 |
| 37. | முக்கிய சரணாலயங்கள் | 241 |
| 38. | மக்கள்தொகை கணக்கெடுப்பு – 2011 | 241 |
| 39. | மொழி சார்ந்த விவரங்கள் | 243 |
| 40. | அண்டை நாடுகளுடனான இந்தியாவின் எல்லைகள் | 244 |


CHANDRU MATHS

# குறிப்புகளுக்காக

CHANDRU MATHS

## குறிப்புகளுக்காக

CHANDRU MATHS

# தேசம்

## இந்தியா

சிந்து (Indus) நதி என்ற பெயரைத் தழுவி, இந்தியா என்ற பெயர் வந்தது. இந்தியாவின் மொத்தப் பரப்பு 32,87,263 சதுர கி.மீ. ஆகும். பரப்பளவில் இந்தியா, உலகநாடுகளிடையே ஏழாவது இடத்தைப் பெற்றுள்ளது. இந்தியா நிலநடுக்கோட்டுக்கு வடக்கில் அமைந்துள்ளது. நிலவியல் அடிப்படையில் இந்தியாவை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன: (1) சிந்து கங்கைச் சமவெளி, (2) இமாலயப் பகுதி, (3) பாலைவனப் பகுதிகள், (4) தெற்குக் கடற்கரைப் பகுதிகள். இந்தியாவின் தட்ப வெப்ப நிலையில் மிகுந்த வேறுபாடுகள் காணப்படுகின்றன. டார்ஜிலிங், சிம்லா போன்ற இடங்களில் 15.7°C–யும், நாகபுரியில் 40°C–யும் உள்ளது. இந்தியா முக்கியமாக தென்மேற்குப் பருவக்காற்றினாலும், வடகிழக்குப் பருவக்காற்றினாலும் மழை பெறுகிறது.

இந்தியாவின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு 1872–இல் முதன்முதலாக மேற்கொள்ளப்பட்டது. இது பல்வேறு காலகட்டங்களில் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டது. 1881–ஆம் ஆண்டுதான் மக்கள்தொகைக் கணக்கெடுக்கும்பணி நாடெங்கிலும் ஒரே சமயத்தில் நடைபெற்றது. அதற்குப் பிறகு பத்தாண்டுக்கு ஒரு முறை மக்கள்தொகைக் கணக்கெடுப்பு நடைபெற்று வருகிறது. தற்போதைய 2011–ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பு இந்த வரிசையில் 15–ஆவது ஆகும். சுதந்திரத்திற்குப் பிறகு எடுக்கப்பட்ட மக்கள்தொகைக் கணக்கெடுப்பு 7–ஆவது கணக்கெடுப்பாகும்.

2011–ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் இறுதி அறிக்கையின்படி, இந்தியாவின் மக்கள்தொகை 121 கோடியே 8 இலட்சத்து 54 ஆயிரத்து 977 ஆகும். இதில் ஆண்கள் 623.7 மில்லியன்; பெண்கள் 586.4 மில்லியன். பத்தாண்டுக்கான மக்கள்தொகைப் பெருக்கம் 17.7 சதவீதம். இதற்கு முந்தைய பத்தாண்டில் இது 21.5 சதவீதமாக இருந்தது. 2001–இல் ஒரு ச.கி.மீட்டருக்கு 325 பேர் என்றிருந்த மக்கள்தொகை நெருக்கம் 2011–இல் 382 பேராக உயர்ந்துள்ளது. மாநிலங்களில் பீகாரில் அதிக மக்கள் தொகை நெருக்கத்துடன் ச.கி.மீட்டருக்கு 1,106 பேர் வசிக்கின்றனர்; ஆனால் அருணாச்சலப் பிரதேசத்தில் 17 பேரே வசிக்கின்றனர். யூனியன் பிரதேசங்களில் டெல்லியில் அதிக மக்கள்தொகை நெருக்கத்துடன் ச.கி.மீட்டருக்கு 11,320 பேர் வசிக்கின்றனர்; ஆனால் அந்தமான் நிக்கோபார் தீவுகளில் 46 பேரே வசிக்கின்றனர். இந்தியாவின் மக்கள்தொகையில் 31.2 சதவீதத்தினரே நகரத்தில் வசிக்கின்றனர். 68.8 சதவீதத்தினர் கிராமப்புறங்களில் வசிக்கின்றனர். மக்கள்தொகை அதிகமான மாநிலம் உத்திரப்பிரதேசம் (19,98,12,341); மக்கள்தொகை குறைவான மாநிலம் சிக்கிம் (6,10,577). அதிகமான மக்கள்தொகையில் மகாராஷ்டிரம் (11,23,74,333), பீகார் (10,40,99,452), மேற்கு வங்காளம் (9,12,76,115) ஆகிய மாநிலங்கள் முறையே 2–ஆவது, 3–ஆவது மற்றும் 4–ஆவது இடத்தை வகிக்கின்றன.

இந்தியாவில் முழு கல்வியறிவு பெற்றவர்கள் 74 சதவீதம். இந்திய மக்கள்தொகையில் ஆண் பெண் விகிதம் 1000 ஆண்களுக்கு 943 பெண்கள் என்ற நிலை உள்ளது. மாநிலங்கள் அளவில் கேரளாவில் 1000 ஆண்களுக்கு 1084 பெண்கள் என்ற விகிதத்தில் முதலிடத்திலும், ஹரியானாவில் 1000க்கு 879 என்ற விகிதத்தில் கடைசி இடத்திலும் உள்ளது.

**ஆட்சிமொழி**

அரசியலமைப்புச் சட்டப்படி (சரத்து 343) தேவநாகிரி வரிவடிவம் கொண்ட இந்தியே இந்தியாவின் ஆட்சி மொழியாக ஏற்கப்பட்டுள்ளது. 1963–இல் நாடாளுமன்றத்தில் பண்டித நேரு இந்தி பேசாத மாநில மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் ஆட்சி மொழியாகத் தொடரும் என உறுதியளித்தார். எனினும் 1965 முதல் இந்தியும் ஆங்கிலமும் சேர்ந்தே ஆட்சிமொழியாக உள்ளன. அரசியல் சட்டம் 22 மொழிகளைத் தேசிய மொழிகளாக ஏற்றுள்ளது.

1. இந்தி, 2. தமிழ், 3. தெலுங்கு, 4. கன்னடம், 5. வங்காளி, 6. அஸாமி, 7. மராத்தி, 8. ஒடியா, 9 சிந்தி, 10. பஞ்சாபி, 11. சமஸ்கிருதம், 12. குஜராத்தி, 13. காஷ்மீரி, 14. உருது, 15. கொங்கணி, 16. மணிப்புரி, 17. நேபாளி, 18. மலையாளம், 19. போடோ, 20. டோக்ரி, 21. மைதிலி, 22. சந்தாலி.

**தேசியக் கொடி (National Flag)**

இந்தியாவின் தேசியக் கொடி மூவர்ணக் கொடி. இதில் மேலே காவிநிறமும், நடுவில் வெள்ளை நிறமும் கீழே பச்சை நிறமும் உள்ளன. வெள்ளை நிறத்தின் நடுவில் நீல நிறத்தில் தர்மச்சக்கரம் உள்ளது. இது 24 ஆரங்களைக் கொண்டது. இக்கொடி 1947–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22–ஆம் தேதி அங்கீகரிக்கப்பட்டு, அதே ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14–ஆம் தேதி நள்ளிரவில் இந்திய மகளிர் சார்பில் நாட்டிற்கு வழங்கப்பட்டது.

**தேசியக் கொடியை உபயோகிக்கும் பொழுது பின்பற்றப்பட வேண்டிய சில விதிமுறைகள்:** தேசியக் கொடியை ஒரு பொருளின் மீதோ, மனிதனின் மீதோ போர்த்தக் கூடாது. தேசியக் கொடியை விட உயரமாக எந்தக் கொடியையும் பறக்க விடக் கூடாது. கொடியை செங்குத்தாக உயர்த்தியே கொண்டு செல்ல வேண்டும். எப்பொழுதும் காவிநிறம் மேல் உள்ளவாறு கொடியை ஏற்ற வேண்டும். சூரிய உதயத்திற்கு முன்பும், சூரிய அஸ்தமனத்திற்கு பின்பும் தேசியக் கொடியை பறக்கவிடுதல் கூடாது. மழையால், வெயிலால் பாதிப்பு ஏற்படாமல் பாதுகாக்க வேண்டும். தேசியக் கொடியிலுள்ள காவி நிறம் வீரத்தினையும் தியாகத்தினையும், பச்சைநிறம் வளமையையும், வெள்ளைநிறம் அமைதியையும் நடுவில் உள்ள சக்கரம் நாட்டின் முன்னேற்றத்தினையும் குறிக்கின்றது.

**தேசிய சின்னம் (National Emblem)**

நமது தேசிய சின்னம் சாரநாத்திலுள்ள அசோகர் தூணின் மேல் பகுதியில் காணப்படும் அசோகச் சின்னமாகும். இதில் நான்கு சிங்கங்கள் நான்கு திசைகளை பார்த்தபடி உள்ளன. இதன் அடிப்பாகத்தில் ஓர் எருதுவும், குதிரையும், இந்த இரண்டிற்கும் நடுவில் அசோகச் சக்கரமும் உள்ளன. அதன் கீழ் சத்யமேவ ஜயதே (வாய்மையே வெல்லும்) என்று பொறிக்கப்பட்டுள்ளது. 'சத்யமேவ ஜயதே' என்ற வாக்கியம் முண்டக உபநிடதத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. நமது தேசியச் சின்னம் 1950 ஜனவரித் திங்கள் 26–ஆம் நாள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

CHANDRU MATHS

**தேசிய கீதம் (National Anthem)**

'ஜன கண மன' என்று தொடங்கும் இரவீந்திரநாத் தாகூரின் வங்க மொழிப் பாடல் நம் நாட்டின் தேசிய கீதமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இது 1911–ஆம் ஆண்டு டிசம்பர் 27–இல் இந்திய தேசிய காங்கிரஸின் கல்கத்தா மாநாட்டில் முதன் முதலாகப் பாடப்பட்டது. இது 52 விநாடிகளில் பாடி முடிக்கப்பட வேண்டும். 1950, ஜனவரி 24–இல் இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டது.

**தேசியப் பாடல் (National Song)**

பங்கிம் சந்திர சாட்டர்ஜியால் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட 'வந்தே மாதரம்' பாடல் இந்தியாவின் தேசிய கீதத்திற்கு இணையாக தேசியப் பாடலாக 1950 ஜனவரி 24–இல் இந்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இது முதன் முதலாக 1896–ஆம் ஆண்டு கல்கத்தா இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் பாடப்பட்டது.

**தேசிய நாட்குறிப்பு (National Calendar)**

தேசிய நாட்குறிப்பு 1957–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22–ஆம் தேதி நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இதை சக (Saka Era) ஆண்டு என்று கூறுவர். இந்த சக ஆண்டின் முதல் மாதம் கி.பி. 78–ஆம் ஆண்டு தொடங்கியதாக கணிக்கப்படுகின்றது. இது கனிஷ்கர் ஆட்சிக்கு வந்த ஆண்டாகும். இந்த சக ஆண்டு 'இந்திய அரசிதழ்' (Gazette), 'அகில இந்திய வானொலி', 'தேசிய நாட்குறிப்பு' முதலியவற்றில் உபயோகிக்கப்படுகிறது. சக ஆண்டிற்கு 12 மாதங்கள். முதல் மாதம் 'சைத்ரா' கடைசி மாதம் 'பல்குனா'.

| | | |
|---|---|---|
| தேசிய வாக்கியம் | – | "சத்யமேவ ஜெயதே" வாய்மையே வெல்லும் எனப்பொருள் கொண்ட இந்த வாக்கியம் முண்டக உபநிடதத்திலிருந்து பெறப்பட்டது.' |
| தேசியப் பறவை | – | மயில் (பாவோ கிரிஸ்டாட்டஸ்) |
| தேசிய விலங்கு | – | வங்காளப் புலி (பான்தெரா டைகிரிஸ்) |
| தேசியப் பூ | – | தாமரை (நீலம்போ நூசிபெரா) |
| தேசிய மரம் | – | ஆலமரம் (ஃபிக்கஸ் பெங்காலினேசிஸ்) |
| தேசிய பழம் | – | மாம்பழம் (மேக்னிபெரஸ் இண்டிகா) |
| தேசிய நீர் விலங்கு | – | கங்கை நதி டால்ஃபின் (பிளாட்டனிஸ்டா கங்கெடிகா) |
| தேசியப் பாரம்பரிய விலங்கு | – | யானை (எலிப்பேஸ் மேக்ஸிமஸ் இண்டிகஸ்) |
| தேசப்பிதா | – | மகாத்மா காந்தி |
| தேசிய வெளியுறவுக் கொள்கை | – | அணிசேராக் கொள்கை |
| தேசிய தகவல் அறிக்கை | – | வெள்ளை அறிக்கை |
| தேசிய நதி | – | கங்கை நதி |
| தேசிய நாணயம் | – | ரூபாய் ( ₹ ) |
| தேசிய விழாக்கள் | – | குடியரசு தினம் (ஜனவரி 26)<br>சுதந்திர தினம் (ஆகஸ்ட் 15)<br>காந்தி ஜெயந்தி (அக்டோபர் 2) |
| தேசிய விளையாட்டு | – | அதிகாரப்பூர்வமாக எந்த விளையாட்டும் தேசிய விளையாட்டாக அங்கீகரிக்கப்படவில்லை. |

CHANDRU MATHS

**ஆண்டு நிதிநிலை அறிக்கை (Budget)**

ஒவ்வோர் ஆண்டும் நிதிநிலை அறிக்கை பிப்ரவரி மாதம் கடைசி வேலை நாள் அன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். நம் நாட்டின் நிதி ஆண்டு ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 வரை ஆகும்.

**இந்திய நாணய முறை**

இப்பொழுது வழக்கில் உள்ள புதிய பைசா, ரூபாய் முறை 1957–ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது. 5 பைசா, 10 பைசா அதே ஆண்டிலே வெளியிடப்பட்ட போதிலும் ஒரு பைசாவும், உலோக 1 ரூபாயும் 1962–ஆம் ஆண்டுதான் வெளியிடப்பட்டன.

நம் நாட்டில் முதன் முறையாக ரூபாய் ஷெர்ஷா காலத்திலேயே (1542) வெளியிடப்பட்டது. வெளிநாட்டு வர்த்தகத்தில் இந்திய ரூபாயின் மதிப்பு அமெரிக்க டாலரின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டு பரிமாற்றம் செய்யப்படுகிறது.

இந்திய ரூபாய்க்கான புதிய சின்னமாக தேவநாகிரி 'ர' மற்றும் ரோமன் 'ஆர்' ஆகிய இரண்டு எழுத்துகளையும், கலந்து உருவாக்கப்பட்ட '₹' என்ற சின்னத்தை மத்திய அமைச்சரவை தேர்வு செய்து 2010 ஜூலை 15 அன்று ஒப்புதல் வழங்கியது. இதனையடுத்து தற்போது இந்திய ரூபாய் நாணயங்களிலும், கரன்சிகளிலும், இச்சின்னம் சேர்க்கப்பட்டு புழக்கத்தில் விடப்பட்டுள்ளது. நாணய மதிப்பிற்கு தனிச்சின்னம் கொண்ட அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய யூனியன், ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு அடுத்து ஐந்தாவது நாடு என்ற பெருமையை இதன் மூலம் இந்தியா பெற்றுள்ளது. இதனை உருவாக்கியவர் தமிழ்நாட்டைச் சேர்ந்த மும்பை ஐ.ஐ.டி. மாணவர் டி. உதயகுமார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவின் புள்ளி விவரங்கள்

**புவியியல் அமைவிடம்:** புவியின் வடக்கு அட்சரேகை $8^\circ 4'$–முதல் $37^\circ 6'$– வரையும், கிழக்கு தீர்க்க ரேகை $68^\circ 7'$–முதல் $97^\circ 25'$–வரையும் இடையேயும் இந்தியாவின் நிலப்பரப்பு அமைந்துள்ளது.

**எல்லைகள்:** வடக்கு, வடகிழக்கு மற்றும் வடமேற்கில் இமய மலைகள், தெற்கில் இந்துமகா சமுத்திரம், மேற்கு, தென்மேற்கில் அரபிக்கடல், கிழக்கு, வடகிழக்கில் வங்காள விரிகுடா. பரப்பு: வடக்கு தெற்காக 3214 கி.மீ. நீளம் கிழக்கு மேற்காக அதிகபட்ச அகலம் 2933 கி.மீ. இது தெற்கே செல்லச் செல்லக் குறுகி குமரியில் முனையாகிறது. மொத்தப் பரப்பளவு 32,87,263 ச.கி.மீ. இதன் எல்லைப்புற நீளம் 15,200 கி.மீ. கடற்கரையின் நீளம் 7516.6 கி.மீ. வங்காள விரிகுடாவில் உள்ள அந்தமான் நிக்கோபார் தீவுகளும், அரபிக் கடலில் உள்ள இலட்சத் தீவுகளும் இந்தியப் பகுதிகளே.

**அண்டை நாடுகள்:** வடமேற்கு –பாகிஸ்தான், ஆஃப்கானிஸ்தான். கிழக்கு – பங்களாதேஷ், மியான்மர். வடக்கு – சீனா, திபெத், நேபாளம் மற்றும் பூடான். தெற்கு – இலங்கை.

**அமைவிடம் :** இந்திய தீபகற்பமானது ஆசிய கண்டத்தின் முதன்மை நிலப்பரப்பிலிருந்து இமய மலையினால் பிரிக்கப்பட்டுள்ளது.

**இந்திய திட்டநேரம் (IST) :** GMT + 5.30 மணி

**தொலைபேசிக் குறியீடு :** +91

**காலநிலை (Climate) :** ஒட்டுமொத்தமாக இந்தியாவை வெப்பமண்டல பருவமழை நாடு என வரையறுக்கலாம். ஆனால் வட இந்தியப் பகுதிகள் முழுமையும் நிலநடுக்கோட்டுப் பகுதியைத் தாண்டியும் பரந்து விரிந்துள்ளது. இந்தியா முழுவதும் நிலநடுக்கோட்டு உயர் வெப்பக் காலநிலையும் வறண்ட குளிர்காலமும் நிலவுகிறது. இந்தியாவில் நான்கு பருவக்காலங்கள் நிலவுகின்றன.

1. குளிர்காலம் (டிசம்பர் – பிப்ரவரி)
2. கோடைகாலம் (மார்ச் – ஜூன்)
3. தென் மேற்குப் பருவமழைக்காலம் (ஜூன் – செப்டம்பர்)
4. பருவமழைக்குப் பிந்தைய காலம் அல்லது வடகிழக்கு பருவமழைக்காலம் (அக்டோபர் – நவம்பர்)

**நிலவியல் தோற்றம் (Terrian) :** இந்தியாவின் முதன்மை நிலம் நான்கு நிலத்தோற்றங்களைக் கொண்டுள்ளது. அவை, மலைப்பிரதேசம், கங்கை மற்றும் சிந்து சமவெளிகள், பாலைவனம், தென்னக தீபகற்பம்.

**இனக்குழுக்கள் (Ethnic Groups) :** இந்திய மக்களை 5 வகை இனக்குழுக்களாகப் பிரிக்கலாம். 1. ஆஸ்ட்ரலாய்டு (திராவிடர்கள்), 2. மங்கோலாய்டு, 3. யூரோப்பாய்டு, 4. கௌகாசியம், 5. நீக்ராய்டு

**மதங்கள் :** இந்துக்கள் (80.5%), இஸ்லாமியர்கள் (13.4%), கிறித்துவர்கள், பௌத்தர்கள், சீக்கியர்கள், சமணர்கள்

**அரசியலமைப்பின்படி நாட்டின் பெயர் :** இந்தியா (அல்லது) பாரதம்

**அரசின் வகை :** இறையாண்மைமிக்க, மதச்சார்பற்ற, சமத்துவ, மக்களாட்சிக் குடியரசு

**அரசாங்க வகை :** பாராளுமன்ற வகை

**மத்திய நிர்வாகம் (Executive) :**

நாட்டின் தலைவர் (Head of the State) - குடியரசுத் தலைவர்.

அரசின் தலைவர் (Head of the Government) - பிரதமர்

**சட்டமியற்றும் அமைப்பு (Legislative) :** குடியரசுத் தலைவர், மக்களவை (லோக்சபா), மாநிலங்களவை (இராஜ்ஜிய சபா) ஆகியவற்றை உள்ளடக்கிய நாடாளுமன்றம்

**நீதித்துறை (Judicial) :** இந்தியாவின் மிக உயரிய நீதி வழங்கும் அமைப்பு உச்சநீதிமன்றமாகும். இதன் கீழ் மாநில உயர்நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. உயர்நீதிமன்றங்களின்கீழ் மாவட்ட நீதிமன்றங்கள் செயல்படுகின்றது.

**தேசிய விடுமுறை நாட்கள்** : **ஜனவரி 26** (குடியரசு தினவிழா), **ஆகஸ்ட் 15** – (சுதந்திர தினவிழா), **அக்டோபர் 2** (காந்தி ஜெயந்தி)

**தலைநகர்:** புதுடெல்லி.

**மாநிலங்கள்** (28)

1. அருணாச்சலப்பிரதேசம், 2. அஸ்ஸாம், 3. ஆந்திரப்பிரதேசம் (சீமாந்திரா), 4. இமாச்சலப்பிரதேசம், 5. உத்திரப்பிரதேசம், 6. உத்தரகாண்ட், 7. ஒடிசா, 8. கர்நாடகா, 9. குஜராத், 10. கேரளா, 11. கோவா, 12. சத்தீஸ்கர், 13. சிக்கிம், 14. தமிழ்நாடு, 15. திரிபுரா, 16. தெலங்கானா, 17. நாகலாந்து, 18. பஞ்சாப், 19. பீகார், 20. மகாராஷ்டிரா, 21. மணிப்பூர், 22. மத்தியப்பிரதேசம், 23. மிசோரம், 24. மேகாலயா, 25. மேற்கு வங்காளம், 26. இராஜஸ்தான், 27. ஜார்கண்ட், 28. ஹரியானா.

**மத்திய ஆட்சிப் பகுதிகள்** (8)

1. தேசியத் தலைநகர் பகுதி: டெல்லி, 2. அந்தமான் நிக்கோபார் தீவுகள், 3. இலட்சத் தீவுகள், 4. சண்டிகர், 5. டாமன்–டையூ மற்றும் தாத்ரா–நாகர் ஹவேலி, 6. புதுச்சேரி, 7. ஜம்மு – காஷ்மீர், 8. லடாக்.

CHANDRU MATHS

# இந்திய மாநிலங்களின் விவரங்கள்

## அருணாச்சலப் பிரதேசம்

- ஜூம் எனப்படும் பழைமையான தற்காலிக வேளாண்முறை இம்மாநிலத்தில் பரவலாகக் மேற்கொள்ளப்படுகின்றது.
- இந்தியாவின் கிழக்கு முனையில் அமைந்துள்ள இம்மாநிலம் உதயசூரியனின் நாடு எனப்படுகின்றது.
- வடகிழக்கு மாநிலங்களிலேயே மிகப்பெரிய மாநிலமான இதில்தான் அதிக பரப்பிலான வனப்பகுதிகள் உள்ளன.
- இந்தியாவின் மிகப்பெரிய புத்தமடாலயமான தவாங் இம்மாநிலத்தில்தான் அமைந்துள்ளது.
- இந்தியாவிலேயே மிக அதிக மொழிகள் பேச்சுவழக்கில் உள்ள மாநிலம்
- இம்மாநிலம் முன்பு வடகிழக்கு முன்னணி முகமை (NFA - North East Frontier agency) என்றழைக்கப்பட்டது. பிரம்மபுத்ரா நதி சீனாவிலிருந்து இம்மாநிலத்தின் வழியே 'சியாங்' என்ற பெயரில் இந்தியாவிற்குள் நுழைகின்றது.

| | |
|---|---|
| தலைநகர் | இட்டாநகர் |
| உயர்நீதிமன்றம் | கௌஹாத்தி உயர்நீதிமன்றம், இட்டா நகர் அமர்வு |
| மாநில விலங்கு | மித்துன் |
| மாநிலப்பறவை | கிரேட் ஹார்ன்பில் |
| ஆட்சிமொழி | ஆங்கிலம் |
| பரப்பு | 83,743 ச.கி.மீ. |
| மொழி | நிஷி, ஆதி, வாஞ்சோ போன்று ஒவ்வொரு பழங்குடியினரும் ஒவ்வொரு மொழி பேசுகின்றனர். |
| மக்கள்தொகை (2011) | 13,83,727 (ஆண்கள் – 7,13,912, பெண்கள் – 6,69,815) |
| பத்தாண்டு மக்கள் வளர்ச்சி (2001–2011) | 26 சதவீதம் |
| மக்கள் நெருக்கம் ச.கி.மீ. | 17 ச.கி.மீ. |
| ஆயிரம் ஆண்களுக்கு | 938 பெண்கள் |
| எழுத்தறிவு | 65.4 சதவீதம் (ஆண்கள் : 72.6%, பெண்கள் : 57.7%) |
| லோக்சபா இடங்கள் | 2 |
| ராஜ்யசபா இடங்கள் | 1 |
| சட்டமன்ற இடங்கள் | 60 |

CHANDRU MATHS

## அஸ்ஸாம்

- இந்தியாவிலேயே முதன்முறையாக குவஹாத்தி நகரின் விலங்காக (City Animal of Guwahati) கங்கை நதி டால்பின் அறிவிக்கப்பட்டுள்ளது. கங்கை நதி டால்பின் இந்தியாவின் தேசிய நீர்வாழ்விலங்காகவும் உள்ளது குறிப்பிடத்தக்கது.
- வடமேற்கு இந்தியாவின் முதல் யானைகளுக்கான பிரத்யேக மருத்துவமனை இம்மாநிலத்தின் காசிரங்கா தேசிய பூங்காவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- இந்தியாவின் தேயிலைத் தோட்டம் எனப்படும் இம்மாநிலம், உலகின் ஒட்டுமொத்தத் தேயிலை உற்பத்தியில் சுமார் 17 சதவிகிதம் கொண்டுள்ளது.
- ஆயுதப்படை சிறப்பு அதிகாரச்சட்டம் – 1958 அமல்படுத்தபட்ட முதல் இந்திய மாநிலம் இதுதான். தற்பொழுது வரை இங்கு அச்சட்டம் அமலிலுள்ளது.
- வங்கதேசத்திலிருந்து ஏராளமானோர் சட்டவிரோதமாக குடியேறுவது இம்மாநிலத்தின் பெரும் பிரச்சனையாக உள்ளது.
- வடகிழக்கு மாநிலங்களின் வாயில் என்றும் அஸ்ஸாம் அழைக்கப்படுகின்றது.
- இம்மாநிலத்தில் பிரம்மபுத்ரா நதியினால் உருவாக்கப்பட்டுள்ள உலகின் மிகப்பெரிய ஆற்றுத்தீவான மஜூலி 2016 ஆகஸ்டில் தனி மாவட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் முதல் ஆற்றுத்தீவு மாவட்டம் இதுதான்.

| | |
|---|---|
| தலைநகர் | திஸ்பூர் |
| உயர்நீதிமன்றம் | கௌஹாத்தி |
| மாநில நடனம் | பிகு |

| | |
|---|---|
| மாநில விலங்கு | ஒற்றைக்கொம்பு காண்டாமிருகம் |
| கௌஹாத்தி நகர விலங்கு | கங்கைநதி டால்பின் |
| பரப்பு | 78,438 ச.கி.மீ. |
| மொழி | அசாமி, பெங்காலி, போடோ, மிஸ்லிங் |
| மக்கள்தொகை (2011) | 3,12,05,576 (ஆண்கள்–1,59,39,443, பெண்கள்–1,52,66,133) |
| பத்தாண்டு மக்கள் வளர்ச்சி (2001–2011) | 17.1 சதவீதம் |
| மக்கள் நெருக்கம் ச.கி.மீ. | 398 |
| எழுத்தறிவு | 73.18 சதவீதம் (ஆண்கள் : 77.8%, பெண்கள் : 66.3%) |
| ஆயிரம் ஆண்களுக்கு | 958 பெண்கள் |
| லோக்சபா இடங்கள் | 14 |
| ராஜ்யசபா இடங்கள் | 7 |
| சட்டமன்ற இடங்கள் | 126 |
| பெரிய நகரம் | கௌஹாத்தி |
| உயர்நீதிமன்றம் | கௌஹாத்தி |

## ஆந்திரப்பிரதேசம்

- ஆந்திரப்பிரதேசமானது பரப்பளவின் அடிப்படையில் இந்தியாவின் எட்டாவது பெரிய மாநிலமாகவும், மக்கள்தொகையின் அடிப்படையில் பத்தாவது பெரிய மாநிலமாகவும் உள்ளது.
- சுமார் 974 கி.மீ நீளமுள்ள கடற்கரையைக் கொண்டுள்ள இம்மாநிலம் குஜராத்திற்கடுத்து மிக நீண்ட கடற்கரையைக் கொண்டுள்ள இந்திய மாநிலமாக விளங்குகிறது.
- இம்மாநிலத்தில் சுமார் 2000 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள ராமோஜி ஒருங்கிணைந்த சினிமா படப்பிடிப்பு வளாகம் உலகின் மிகப்பெரிய சினிமா படப்பிடிப்பு வளாகமாகும்.
- 2014–ஆம் ஆண்டில் இம்மாநிலத்திலிருந்து தெலங்கானா மாநிலத்தினைப் பிரித்தபோது தலைநகரான ஐதராபாத் தெலங்கானா எல்லைக்குள் அடங்கிவிட்டது. ஆனால் உடனடியாகத் தலைநகரை மாற்றுவது சாத்தியமில்லாதது என்பதால் அடுத்த 10 வருடங்களுக்கு ஐதராபாத் நகரே இரு மாநிலங்களுக்கும் தலைநகராக விளங்கும் என அறிவிக்கப்பட்ட நிலையில் தற்போது அமராவதி ஆந்திரப்பிரதேசத்தின் தலைநகரமானது.
- அமெரிக்கா மற்றும் இரஷ்யாவுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின்படி இந்தியாவில் அமைக்கப்படவுள்ள 9 அணுமின் உலைகளையும் ஆந்திராவிலேயே அமைக்க இடமளித்து ஆந்திரப்பிரதேசத்தினை நாட்டின் அணுமின் நிலைய மையமாக (Atomic Power Hub) மாற்றும் முயற்சிகளில் இம்மாநில அரசு ஈடுபட்டுள்ளது.
- இந்தியாவின் அரிசிக்கிண்ணம் (Rice Bowl) மற்றும் முட்டைக்கிண்ணம் (Egg Bowl) என்றழைக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| தலைநகர் | அமராவதி |
| மாநில விலங்கு | வெளிமான் (Black buck) |
| மாநிலப் பறவை | பனங்காடை (Indian Roller) |
| மாநில மலர் | நீர் அல்லி |
| மாநில மரம் | வேம்பு |
| மொழி | தெலுங்கு, உருது |
| மக்கள்தொகை (2011) | 4,93,86,799 (ஆண்கள்–2,47,38,068, பெண்கள்–2,46,48,731) |
| பத்தாண்டு மக்கள் வளர்ச்சி (2001–2011) | 11 சதவீதம் |
| மக்கள் நெருக்கம் ச.கி.மீ. | 308 |
| ஆயிரம் ஆண்களுக்கு | 996 பெண்கள் |
| எழுத்தறிவு | 67% (ஆண்கள் : 75%, பெண்கள் : 60%) |

CHANDRU MATHS

| | |
|---|---|
| லோக்சபா இடங்கள் | 25 |
| சட்டமன்ற இடங்கள் | 175 |
| ராஜ்யசபா இடங்கள் | 11 |
| கடற்பகுதி நீளம் | 972 கி.மீ. |

## இமாச்சலப் பிரதேசம்

- இந்தியாவிலேயே முதன்முறையாக ரோட்டா வைரஸிற்கான தடுப்பூசித் திட்டம் இம்மாநிலத்தில்தான் துவங்கப்பட்டது.
- 2015 அக்டோபரில் இம்மாநிலத்தின் கங்ரா மாவட்டத்தில் பாராகிளைடிங், உலகக் கோப்பைப் போட்டிகள் நடத்தப்பட்டன. இது இந்தியாவில் நடத்தப்படும் முதல் பாராகிளைடிங் உலகப்கோப்பை போட்டியாகும்.
- இம்மாநிலத்தின் சிம்லா–கால்கா இடையே அமைக்கப்பட்டுள்ள 96 கி.மீ நீள இரயில் பாதையானது 102 குகைகளையும், 865 பாலங்களையும் கொண்டுள்ளது.
- இங்கு அதிகளவு பழ உற்பத்தி நடைபெறுவதால் இந்தியாவின் பழக்கூடை என்றழைக்கப்படுகிறது. இந்தியாவின் ஆப்பிள் மாநிலம் என்றும் அறியப்படுகிறது.

| | |
|---|---|
| தலைநகர் | ஷிம்லா (கோடைகாலம்)<br>தரம்சாலா (குளிர்காலம்) |
| மாநில விலங்கு | கஸ்தூரி மான் |
| மாநிலப் பறவை | மோனல் |
| மாநில மரம் | தேவதாரு |
| பரப்பு | 55,673 ச.கி.மீ. |
| மொழி | பஹாரி, ஹிந்தி, பஞ்சாபி |
| மக்கள்தொகை (2011) | 68,64,602 (ஆண்கள் – 34,81,873, பெண்கள் – 33,82,729) |
| பத்தாண்டு மக்கள் வளர்ச்சி (2001–2011) | 12.9 சதவீதம் |
| மக்கள் நெருக்கம் ச.கி.மீ. | 123 |
| ஆயிரம் ஆண்களுக்கு | 972 பெண்கள் |
| எழுத்தறிவு | 82.8 சதவீதம் (ஆண்கள் – 89.5%, பெண்கள் – 75.9%) |
| லோக்சபா இடங்கள் | 4 |
| ராஜ்யசபா இடங்கள் | 3 |
| சட்டமன்ற இடங்கள் | 68 |

CHANDRU MATHS

## உத்திரப்பிரதேசம்

- பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் ஒருங்கிணைந்த மாகாணங்கள் (United Provinces) என்று அழைக்கப்பட்டது.
- இம்மாநிலத்தின் வாரணாசி (காசி) நகரமானது உலகின் பழைமையான நகரங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.
- 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை இம்மாநிலத்தில் நடைபெறும் கும்பமேளா விழாவானது உலகில் மிக அதிக அளவில் மக்கள் கூடும் விழாவாகும்.
- இந்தியாவின் முதல் மிதிவண்டி நெடுஞ்சாலை (Bicycle Highway) தாஜ்மகால் மற்றும் இட்டாவாக் இடையே இம்மாநில அரசால் அமைக்கப்பட்டுள்ளது.
- இம்மாநிலத்தின் முசாபர் நகர் மாவட்டம் தேசிய தலைநகரப் பகுதியான டெல்லியுடன், 2015–இல் இணைக்கப்பட்டுள்ளது.
- சுமார் 403 சட்டமன்ற இடங்களையும் லோக்சபா இடங்களையும் 31 இராஜ்ய சபா இடங்களையும் கொண்டுள்ள இம்மாநிலம் தேசிய அளவில் அரசியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த மாநிலமாகும்.
- சுமார் 20 கோடி மக்கள்தொகையினைக் கொண்டுள்ள இம்மாநிலம் ஒரு தனிநாடாக இருந்திருந்தால் உலக அளவில் ஆறாமிடத்தைப் பிடித்திருக்கும்.
- உத்திரப்பிரதேசத்தின் பொருளாதாரத் தலைநகரமாக கான்பூர் கருதப்படுகிறது.

| | |
|---|---|
| தலைநகர் | லக்னோ |
| உயர்நீதிமன்றம் | பிரயாக்ராஜ் |
| மாநில விலங்கு | சதுப்பு மான் (பாராசிங்கா) |
| மாநிலப் பறவை | சாரல் கொக்கு |
| மாநில மரம் | புரசமரம் |
| பரப்பு | 2,40,928 ச.கி.மீ. |
| மொழி | ஹிந்தி, உருது |
| மக்கள்தொகை (2011) | 19,98,12,341 (இந்தியாவிலேயே முதலிடம்) (ஆண்கள் – 10,44,80,510, பெண்கள் – 9,53,31,831) |
| பத்தாண்டு மக்கள் வளர்ச்சி (2001–2011) | 20.2 சதவீதம் |
| மக்கள் நெருக்கம் ச.கி.மீ. | 829 |
| ஆயிரம் ஆண்களுக்கு | 912 பெண்கள் |
| எழுத்தறிவு | 67.7 சதவீதம் (ஆண்கள் – 77.3%, பெண்கள் – 57.2%) |
| லோக்சபா இடங்கள் | 80 |
| ராஜ்யசபா இடங்கள் | 31 |
| சட்டமன்ற இடங்கள் | 403 |
| சட்டமேலவை இடங்கள் | 100 |

## உத்திரகாண்ட்

- 2000–ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இம்மாநிலம் முன்பு உத்திராஞ்சல் என்று அழைக்கப்பட்டது.
- இம்மாநிலத்திலுள்ள ரிஷிகேஷ் நகரத்தில் அசைவ உணவுகளும் ஆல்கஹாலும் சட்டப்பூர்வமாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.
- இது கடவுள்களின் தேசம் என்று அழைக்கப்படுகின்றது.
- பழைமையான தொழில்நுட்பக்கல்லூரிகளான ரூர்க்கி தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் கோவிந்த் வல்லப்பந்த் வேளாண் பல்கலைக்கழகம் போன்றவை இம்மாநிலத்தில் அமைந்துள்ளன.
- இம்மாநிலத்தில் அமைந்துள்ள ரிஷிகேஷ், சர்வதேச யோகா தலைநகரமாகக் கருதப்படுகின்றது.

| | |
|---|---|
| தலைநகர் | பராரிசைன்(bararisain) – கோடைகாலம்<br>டேராடூன் – குளிர்காலம் |
| மாநில விலங்கு | கஸ்தூரி மான் |
| மாநிலப் பறவை | இமாலய மோனல் |
| பரப்பு | 53,483 ச.கி.மீ. |
| மொழி | இந்தி, கார்வாலி, குமாவோனி |
| மக்கள்தொகை (2011) | 1,00,86,292 (ஆண்கள் – 51,37,773, பெண்கள் – 49,48,519) |
| பத்தாண்டு மக்கள் வளர்ச்சி (2001–2011) | 18.8 சதவீதம் |
| மக்கள் நெருக்கம் ச.கி.மீ. | 189 |
| ஆயிரம் ஆண்களுக்கு | 963 பெண்கள் |
| எழுத்தறிவு | 78.8 சதவீதம் (ஆண்கள் – 87.4%, பெண்கள் – 70%) |
| லோக்சபா இடங்கள் | 5 |
| ராஜ்யசபா இடங்கள் | 3 |
| சட்டமன்ற இடங்கள் | 70 |

CHANDRU MATHS

## ஒடிசா

- ஒரிசா என்றழைக்கப்பட்டு வந்த இம்மாநிலம் ஒடிசா எனவும், ஒரியா என்றழைக்கப்பட்டு வந்த இம்மாநில மொழி ஒடியா எனவும் கடந்த 2010–ஆம் ஆண்டில் மாற்றப்பட்டது.
- இம்மாநிலத்தில் அமைந்துள்ள சிலிகா ஏரியானது இந்தியாவின் மிகப்பெரியதும் உலகின் இரண்டாவது மிகப் பெரியதுமான உப்புநீர் ஏரியாகும்.
- மின்சார பரிமாற்றம் மற்றும் பகிர்மானம் ஆகியவற்றை தனியார் மயமாக்கிய இந்தியாவின் முதல் மாநிலம் இதுதான்.
- இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (DRDO) ஏவுகணை சோதனை தளம் வீலர் தீவில் அமைந்துள்ளது. தற்போது வீலர் தீவானது அப்துல்கலாம் தீவு எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளது.
- மகாநதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள உலகின் மிக நீளமான அணையான ஹிராகுட் அணை, இம்மாநிலத்தில்தான் கட்டப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| தலைநகர் | புவனேஸ்வர் |
| உயர்நீதிமன்றம் | கட்டாக் |
| மாநில விலங்கு | சாம்பர் மான் |
| மாநிலப் பறவை | நீல அழகி (Blue Jay) |
| மாநில மலர் | அசோக மலர் |
| மாநில மரம் | அஸ்வதா மரம் |
| மாநில ஊர்வன | உப்பு நீர் முதலை |
| பரப்பு | 1,55,707 ச.கி.மீ. |
| மொழி | ஒடியா |
| மக்கள்தொகை (2011) | 4,19,74,218 (ஆண்கள்: 2,12,12,136, பெண்கள்: 2,07,62,082) |
| பத்தாண்டு மக்கள் வளர்ச்சி (2001–2011) | 14 சதவீதம் |
| மக்கள் நெருக்கம் ச.கி.மீ. | 270 |
| ஆயிரம் ஆண்களுக்கு | 979 பெண்கள் |
| எழுத்தறிவு | 72.9 சதவீதம் (ஆண்கள் – 81.6%, பெண்கள் – 64%) |
| லோக்சபா இடங்கள் | 21 |
| ராஜ்யசபா இடங்கள் | 10 |
| சட்டமன்ற இடங்கள் | 147 |

CHANDRU MATHS

## கர்நாடகா

- தகவல் தொழில்நுட்பத்தில் முன்னணியிலுள்ள இம்மாநிலத்தின் தலைநகரான பெங்களூரு இந்தியாவின் சிலிக்கன் பள்ளத்தாக்கு என்றழைக்கப்படுகிறது.
- இம்மாநிலத்தில் சிரவணபெலகொலாவிலுள்ள கோமதீஸ்வர் சிலை ஒரே கல்லில் செதுக்கப்பட்ட உலகின் மிக உயரமான (57அடி) சிலைகளில் ஒன்றாகும்.
- இம்மாநிலத்தில் அமைந்துள்ள 250 மீட்டருக்கும் அதிக உயரமுடைய ஜாக் நீர் வீழ்ச்சியானது இந்தியாவின் மிக உயரமான நீர்வீழ்ச்சிகளில் ஒன்றாகும்.
- இம்மாநிலத்தின் கொப்பல் மாவட்டத்தில் கங்காவதி எனுமிடத்தில் ஆசியாவிலேயே முதன்முறையாக அரிசி ஆராய்ச்சி தொழில்நுட்ப மையத்தினை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.
- மின்னணு பொருட்கள் உற்பத்தி மற்றும் கச்சா பட்டு உற்பத்தியில் நாட்டிலேயே முதலிடம் பிடித்துள்ளது.

| | |
|---|---|
| தலைநகர் | பெங்களூர் (கோடைகாலம்) ; பெல்காம் (குளிர்காலம்) |
| மாநில விலங்கு | இந்திய யானை |
| மாநிலப் பறவை | பனங்காடை |
| மாநில மலர் | தாமரை |
| மாநில மரம் | சந்தன மரம் |
| பரப்பு | 1,91,791 ச.கி.மீ. |

| | |
|---|---|
| மொழி | கன்னடம் |
| மக்கள்தொகை (2011) | 6,10,95,297 (ஆண்கள் – 3,09,66,657, பெண்கள் – 3,01,28,640) |
| பத்தாண்டு மக்கள் வளர்ச்சி (2001–2011) | 15.6 சதவீதம் |
| மக்கள் நெருக்கம் ச.கி.மீ. | 319 |
| ஆயிரம் ஆண்களுக்கு | 973 பெண்கள் |
| எழுத்தறிவு | 75.4 சதவீதம் (ஆண்கள் – 82.5, பெண்கள் – 68.1) |
| லோக்சபா இடங்கள் | 28 |
| ராஜ்யசபா இடங்கள் | 12 |
| சட்டமன்ற இடங்கள் | 224 |
| சட்டமன்ற மேலவை இடங்கள் | 75 |

## குஜராத்

- இந்தியாவில் மிக நீளமான கடற்கரையைக் (1600 கி.மீ) கொண்டுள்ள மாநிலம் இதுவாகும்.
- வைரத் தொழில்களுக்குப் புகழ்பெற்ற இம்மாநிலத்தின் சூரத்நகரம் உலகின் வைர நகரம் என்றழைக்கப்படுகிறது.
- ஆசியாவின் மிகப்பெரிய பால்பண்ணையை (ஆனந்த்) கொண்டுள்ள இம்மாநிலம் பால் உற்பத்தியில் இந்தியாவிலேயே முதலிடத்தில் உள்ளது.
- உலகின் மிகப்பெரிய எண்ணெய் சுத்திகரிப்பாலை இம்மாநிலத்தின் ஜாம் நகரிலும், உலகின் மிகப்பெரிய கப்பல் உடைக்கும் தொழில்மையம் இம்மாநிலத்தின் அலாங் நகரிலும் அமைந்துள்ளது.
- உலகின் மிக உயர்ந்த சிலை என்ற சிறப்பை பெற்ற வல்லபாய் படேல் சிலை (182 மீ). நர்மதா அணை எதிரே உள்ள சாதுபெட் தீவில் அமைந்துள்ளது.

| | |
|---|---|
| தலைநகர் | காந்திநகர் |
| உயர்நீதிமன்றம் | அகமதாபாத் |
| மாநில விலங்கு | ஆசிய சிங்கம் |
| மாநிலப் பறவை | பூநாரை (கிரேட் பிளமிங்கோ) |
| பரப்பு | 1,96,244 ச.கி.மீ. |
| மொழி | குஜராத்தி |
| மக்கள்தொகை (2011) | 6,04,39,692 (ஆண்கள் – 3,14,91,260, பெண்கள் – 2,89,48,432) |
| பத்தாண்டு மக்கள் வளர்ச்சி (2001–2011) | 19.3 சதவீதம் |
| மக்கள் நெருக்கம் ச.கி.மீ. | 308 |
| ஆயிரம் ஆண்களுக்கு | 919 பெண்கள் |
| எழுத்தறிவு | 78 சதவீதம் (ஆண்கள் – 85.8, பெண்கள் – 69.7) |
| லோக்சபா இடங்கள் | 26 |
| ராஜ்யசபா இடங்கள் | 11 |
| சட்டமன்ற இடங்கள் | 182 |

## கேரளா

- இந்தியாவிலேயே மிக அதிகளவில் எழுத்தறிவு உடையோர் வாழும் மாநிலம் இதுதான்.
- தாய்ப்பாலூட்டுவதில் முன்னணியிலுள்ள இம்மாநிலம் UNICEF மற்றும் WHO ஆகியவற்றால் உலகின் முதன்மையான குழந்தைகள் நல மாநிலம் (Baby Friendly State) என அறிவிக்கப்பட்டுள்ளது.
- கடவுளின் சொந்த தேசம் என்று அழைக்கப்படும் இம்மாநிலத்தின் திருச்சூர் மாவட்டத்திற்குட்பட்ட மேதல்லா எனுமிடத்தில்தான் இந்தியாவிலேயே முதன்முறையாக மசூதியும் (கி.பி.629), பாலயூர் எனுமிடத்தில் இந்தியாவின் முதல் கிறிஸ்தவ தேவாலயமும் (கி.பி.52) கட்டப்பட்டன. இம்மாநிலத்தின் கொச்சி விமான நிலையம் 2015 முதல் முழுக்கமுழுக்க சூரியமின் சக்தியால் செயல்படும் இந்தியாவின் முதல் விமான நிலையமாகியது.

CHANDRU MATHS

| | |
|---|---|
| தலைநகர் | திருவனந்தபுரம் |
| உயர்நீதிமன்றம் | எர்ணாகுளம் |
| மாநில விலங்கு | யானை |
| மாநிலப் பறவை | பெரிய இருவாச்சி (கிரேட் ஹார்ன்பில்) |
| மாநில மரம் | தென்னை மரம் |
| பரப்பு | 38,852 ச.கி.மீ. |
| மொழி | மலையாளம் |
| மக்கள்தொகை (2011) | 3,34,06,061 (ஆண்கள் – 1,60,27,412, பெண்கள் – 1,73,78,649) |
| பத்தாண்டு மக்கள் வளர்ச்சி (2001–2011) | 4.9 சதவீதம் |
| மக்கள் நெருக்கம் ச.கி.மீ. | 859 |
| ஆயிரம் ஆண்களுக்கு | 1,084 பெண்கள் (இந்தியாவிலேயே முதலிடம்) |
| எழுத்தறிவு | 94 சதவீதம் (இந்தியாவிலேயே முதலிடம்) (ஆண்கள் – 96.1, பெண்கள் – 92.1) |
| லோக்சபா இடங்கள் | 20 |
| ராஜ்யசபா இடங்கள் | 9 |
| சட்டமன்ற இடங்கள் | 140 |

## கோவா

- பரப்பளவின் அடிப்படையில் இந்தியாவின் மிகச்சிறிய மாநிலம் கோவா ஆகும்.
- பிரத்யேக பொது சிவில் சட்டத்தினை அமல்படுத்தியுள்ள ஒரே இந்திய மாநிலம் கோவா மட்டுமே.
- சுற்றுலா மற்றும் இரும்புத்தாது ஏற்றுமதியின் மூலம் இம்மாநில அரசு அதிக வருவாய் ஈட்டுகிறது.
- உயிரின பன்மைத்துவ மையம் (Bio diversity hotspot) என்று அறிவிக்கப்பட்டுள்ள மாநிலம்.

| | |
|---|---|
| தலைநகர் | நிர்வாக தலைநகரம் – பானாஜி<br>சட்டமன்ற அமைவிடம் – பர்வோரிம் (parvorim) |
| உயர்நீதிமன்றம் | மும்பை |
| மாநில விலங்கு | இந்திய எருமை |
| மாநிலப் பறவை | கருப்பு புல்புல் |
| மாநில மரம் | மட்டி |
| பரப்பு | 3,702 ச.கி.மீ. |
| மொழி | கொங்கணி, மராத்தி |
| மக்கள்தொகை (2011) | 14,58,545 (ஆண்கள் – 7,39,140, பெண்கள் – 7,19,405) |
| பத்தாண்டு மக்கள் வளர்ச்சி (2001–2011) | 8.2 சதவீதம் |
| மக்கள் நெருக்கம் ச.கி.மீ. | 394 |
| ஆயிரம் ஆண்களுக்கு | 973 பெண்கள் |
| எழுத்தறிவு | 88.7 சதவீதம் (ஆண்கள்–92.6, பெண்கள்–84.7) |
| லோக்சபா இடங்கள் | 2 |
| ராஜ்யசபா இடங்கள் | 1 |
| சட்டமன்ற இடங்கள் | 40 |

## சத்தீஸ்கர்

- இந்தியாவின் மிகப்பெரிய உருக்கு எஃகு உற்பத்தி மாநிலம் இதுதான். நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தியில் இம்மாநிலத்தின் பங்கு 15 சதவிகிதம். இந்தியாவின் மிகப்பெரிய எஃகு சுரங்கமான பிலாய் இங்குதான் அமைந்துள்ளது.

CHANDRU MATHS

- ஜெகதீஸ்பூருக்கு அருகிலுள்ள சித்ரகூட் அருவி அதன் அகலம் காரணமாக 'மினி நயாகரா' என்றழைக்கப்படுகிறது.
- பழங்குடியினத்தவர்கள் அதிகம் வசிக்கும் இம்மாநிலத்தில் நக்ஸலைட்டுகளின் ஆதிக்கம் அதிகம். நக்ஸலைட்டுகளின் ஆதிக்கத்தினைக் குறைக்க ஆபரேஷன் கிரீன் ஹண்ட் எனும் நடவடிக்கையுடன் மத்திய மற்றும் மாநில அரசின் சார்பில் பல்வேறு நலத்திட்டங்களும் அடிப்படைக் கட்டமைப்புத் திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன.
- இந்தியாவின் முதல் தனியார் மயமாக்கப்பட்ட நதியான ஷியோநாத் இங்குதான் அமைந்துள்ளது.
- இரும்புத்தாது மற்றும் மின் உற்பத்தியில் மிக முக்கியப் பங்காற்றும் மாநிலம்.

| | |
|---|---|
| தலைநகர் | நிர்வாக தலைநகரம் – ராய்ப்பூர்<br>நீதி தலைநகர் – பிலாஸ்பூர் |
| மாநில விலங்கு | காட்டெருமை |
| மாநிலப் பறவை | மலை மைனா |
| மாநில மரம் | சால் மரம் |
| பரப்பு | 1,35,192 ச.கி.மீ. |
| மொழி | கோண்ட், கவார், ஹல்பி, பரியா, இந்தி மற்றும் பல பழங்குடியினரின் மொழிகள் |
| மக்கள்தொகை (2011) | 2,55,45,198 (ஆண்கள் – 1,28,32,895, பெண்கள் – 1,27,12,303) |
| பத்தாண்டு மக்கள் வளர்ச்சி (2001–2011) | 22.6 சதவீதம் |
| மக்கள் நெருக்கம் ச.கி.மீ. | 189 |
| ஆயிரம் ஆண்களுக்கு | 991 பெண்கள் |
| எழுத்தறிவு | 70.3 சதவீதம் (ஆண்கள் – 80.3%, பெண்கள் – 60.2%) |
| லோக்சபா இடங்கள் | 11 |
| ராஜ்யசபா இடங்கள் | 5 |
| சட்டமன்ற இடங்கள் | 90 |

## சிக்கிம்

- சுமார் 6 லட்சம் மக்களை மட்டுமே கொண்ட இந்தியாவின் மிகக்குறைந்த மக்கள் தொகையைக் கொண்ட மாநிலம்.
- உலகின் மூன்றாவது மிகப்பெரிய சிகரமான கஞ்சன் ஜங்கா (8,586மீ) இம்மாநிலத்திலுள்ள இமயமலைப் பகுதிகளில்தான் அமைந்துள்ளது.
- ஏறத்தாழ 25 மலைச்சிகரங்கள், 21 பனிச்சிகரங்கள், 225 உயர்ந்த பகுதியிலுள்ள ஏரிகள், 110 ஆறுகள் மற்றும் ஓடைகள் போன்றவை மாநிலத்தில் உள்ளன.
- பிளாஸ்டிக் பயன்பாடு மற்றும் வனப்பகுதிகளில் கால்நடைகளை மேய்த்தல் போன்றவற்றிற்கு தடை விதித்த முதல் இந்திய மாநிலம்.
- இந்தியா–சீனா இடையிலான நாதுலா கணவாய் இம்மாநிலத்தில்தான் அமைந்துள்ளது.
- நேபாளி இன மக்கள் பெரும்பான்மையாக உள்ள ஒரே இந்திய மாநிலம் இதுதான்.

| | |
|---|---|
| தலைநகர் | கேங்க்டாக் |
| மாநில விலங்கு | சிவப்பு பாண்டா |
| மாநிலப் பறவை | ப்ளட் ஃபெஸண்ட் |
| மாநில மரம் | ரோடோடென்ரான் |
| மாநில மலர் | நோபல் ஆர்கிட் |
| பரப்பு | 7,096 ச.கி.மீ. |
| மொழி | லெப்சா, பூட்டியா, ஹிந்தி, நேபாளி, லிம்பு |
| மக்கள் தொகை (2011) | 6,10,577 (ஆண்கள் – 3,23,070, பெண்கள் – 2,87,507) |
| பத்தாண்டு மக்கள் வளர்ச்சி (2001–2011) | 12.9 சதவீதம் |
| மக்கள் நெருக்கம் ச.கி.மீ. | 86 |

| | |
|---|---|
| ஆயிரம் ஆண்களுக்கு | 890 பெண்கள் |
| எழுத்தறிவு | 81.4 சதவீதம் (ஆண்கள் – 86.6%, பெண்கள் – 75.6%) |
| லோக்சபா இடங்கள் | 1 |
| ராஜ்யசபா இடங்கள் | 1 |
| சட்டமன்ற இடங்கள் | 32 |

## தமிழ்நாடு

| | |
|---|---|
| தலைநகர் | சென்னை |
| மாநில விலங்கு | வரையாடு |
| மாநிலப் பறவை | மரகதப்புறா |
| மாநில மரம் | பனைமரம் |
| மாநில மலர் | செங்காந்தள் |
| மாநில நடனம் | பரத நாட்டியம் |
| மாநில விளையாட்டு | சடுகுடு அல்லது கபடி |
| மாநிலப் பழம் | பலாப்பழம் |
| மாநில வண்ணத்துப்பூச்சி | தமிழ் மறவன் |
| பரப்பு | 1,30,060 ச.கி.மீ. |
| மொழி | தமிழ் |
| மக்கள்தொகை (2011) | 7,21,47,030 (ஆண்கள்– 3,61,37,975 ; பெண்கள் – 3,60,09,055) |
| பத்தாண்டு மக்கள் வளர்ச்சி (2001–2011) | 15.60 சதவீதம் |
| மக்கள் நெருக்கம் ச.கி.மீ. | 555 |
| ஆயிரம் ஆண்களுக்கு | 996 பெண்கள் |
| எழுத்தறிவு | 80.1% (ஆண்கள் – 86.8%; பெண்கள் – 73.4%) |
| லோக்சபா இடங்கள் | 39 |
| ராஜ்யசபா இடங்கள் | 18 |
| சட்டமன்ற இடங்கள் | 234 |

## திரிபுரா

- புவியியல் ரீதியில் இந்தியாவிலிருந்து தனிமைபடுத்தப்பட்டுள்ள திரிபுராவானது NH44 எனும் ஒரேயொரு தேசிய நெடுஞ்சாலையின் மூலம் மட்டுமே இந்தியாவின் இதர பகுதிகளுடன் இணைக்கப்பட்டுள்ளது.
- இயற்கை எரிவாயு இம்மாநிலத்தின் முக்கியமான வள ஆதாரமாகும். கைத்தறித் தொழில் இம்மாநிலத்தின் மிகப்பெரிய தொழிலாகும்.
- 2015 ஆகஸ்டில் மரண தண்டனைக்குத் தடைவிதிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி இம்மாநில சட்டசபையில் தீர்மானம் இயற்றப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.
- 1997–ஆம் ஆண்டு இம்மாநிலத்தில் 'ஆயுதப்படைகள் சிறப்புச் சட்டம்' (AFSPA)அமல்படுத்தப்பட்டது. மாநில அரசின் திறம்பட்ட முயற்சிகளால் அமைதிநிலை திரும்பியதையடுத்து 2015 மே 29 அன்றோடு, இம்மாநிலத்திலிருந்து AFSPA விலக்கிக்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| தலைநகர் | அகர்தலா |
| மாநில விலங்கு | பாயர் இலை குரங்கு |
| மாநிலப் பறவை | பச்சை நிற இம்பீரியல் புறா |
| மாநில மரம் | அகர் மரம் |
| மாநில மலர் | நாகேஷ்வர் (இந்தியன் ரோஸ் செஸ்நட்) |
| பரப்பு | 10,486 ச.கி.மீ. |

CHANDRU MATHS

| | |
|---|---|
| மொழி | திரிபுரா, வங்காளி, கொக்பாரக், மணிப்புரி |
| மக்கள்தொகை (2011) | 36,73,917 (ஆண்கள் – 18,74,376, பெண்கள் – 17,99,541) |
| பத்தாண்டு மக்கள் வளர்ச்சி (2001–2011) | 14.8 சதவீதம் |
| மக்கள் நெருக்கம் ச.கி.மீ. | 350 |
| ஆயிரம் ஆண்களுக்கு | 960 பெண்கள் |
| எழுத்தறிவு | 87.2 சதவீதம் (ஆண்கள் – 91.5%, பெண்கள் – 82.7%) |
| லோக்சபா இடங்கள் | 2 |
| ராஜ்யசபா இடங்கள் | 1 |
| சட்டமன்ற இடங்கள் | 60 |

## தெலங்கானா

| | |
|---|---|
| தலைநகர் | ஹைதராபாத் |
| மாநில விலங்கு | புள்ளிமான் |
| மாநிலப் பறவை | பனங்காடை |
| மாநில மலர் | தங்கிடி பூவு |
| மாநில மரம் | ஜம்மி சேட்டு |
| பரப்பு | 1,14,840 ச.கி.மீ. |
| மொழி | தெலுங்கு / உருது |
| மக்கள்தொகை (2011) | 3,51,93,978 (ஆண்கள் : 1,77,04,078; பெண்கள் : 1,74,89,900) |
| பத்தாண்டு மக்கள் வளர்ச்சி (2001–2011) | 11 சதவீதம் |
| மக்கள் நெருக்கம் ச.கி.மீ. | 307 |
| ஆயிரம் ஆண்களுக்கு | 988 |
| எழுத்தறிவு | 67% (ஆண்கள் – 75% ; பெண்கள் – 58%) |
| லோக் சபா இடங்கள் | 17 |
| ராஜ்ய சபா இடங்கள் | 7 |
| சட்டமன்ற இடங்கள் | 119 |

CHANDRU MATHS

## நாகலாந்து

- புகழ்பெற்ற சுதந்திரப் போராட்ட வீராங்கனையான ராணி கைடின்லியு இம்மாநிலத்தைச் சார்ந்தவராவார்.
- இம்மாநிலத்தின் பூர்வகுடிகளான நாகா இன மக்களில் ஒரு சிலர் நாகலாந்தை தனிநாடாக்கக்கோரி பயங்கரவாதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.
- இம்மாநிலத்தில் கொண்டாடப்படும் உழவுத் திருவிழாவான ஹார்ன்பில் திருவிழா உலகப்புகழ் பெற்றதாகும்.

| | |
|---|---|
| தலைநகர் | நிர்வாக தலைநகரம் – கோஹிமா<br>நீதி தலைநகரம் – குவஹாத்தி |
| மாநில விலங்கு | மித்துன் (கயால் எனும் மாடு இனம்) |
| மாநிலப் பறவை | பீனித்ஸ் ட்ராகோபன் |
| மாநில மலர் | ரோடோடென்ரான் |
| ஆட்சிமொழி | ஆங்கிலம் |
| பரப்பு | 16,579 ச.கி.மீ. |
| மொழி | ஸீமா, கொன்யாக், அன்காமி, லோதா, ஆங்கிலம், ஆவ், சங்தம், சகேசங் |
| மக்கள்தொகை (2011) | 19,78,502 (ஆண்கள் – 10,24,649, பெண்கள் – 9,53,853) |

| | |
|---|---|
| பத்தாண்டு மக்கள் வளர்ச்சி (2001–2011) | –0.6 சதவீதம் |
| மக்கள் நெருக்கம் ச.கி.மீ. | 119 |
| ஆயிரம் ஆண்களுக்கு | 931 பெண்கள் |
| எழுத்தறிவு | 79.6 சதவீதம் (ஆண்கள் – 82.8%, பெண்கள் – 76.1%) |
| லோக்சபா இடங்கள் | 1 |
| ராஜ்யசபா இடங்கள் | 1 |
| சட்டமன்ற இடங்கள் | 60 |

## பஞ்சாப்

- விவசாயத்தினை முதன்மைத் தொழிலாகக் கொண்ட இம்மாநிலம் இந்தியாவின் ஒட்டுமொத்த கோதுமை உற்பத்தியில் 45 சதவிகிதத்தினையும் அரிசி உற்பத்தியில் 25 சதவிகிதத்தினையும் கொண்டுள்ளது.
- இந்தியாவில் பசுமைப் புரட்சி இம்மாநிலத்தில்தான் துவங்கியது.
- விவசாயத்திற்குத் தேவையான நீர்ப்பாசன வசதிக்கு ஆறுகளையும், கால்வாய்களையும் நம்பியுள்ள இம்மாநிலத்திற்கு நதிநீர் பங்கீட்டில் ஹரியானாவுடன் பிணக்குகள் உண்டு.
- பாகிஸ்தான் எல்லையில் அமைந்துள்ள இம்மாநிலம் பாகிஸ்தானிலிருந்து ஊடுருவும் தீவிரவாதிகளின் தாக்குதல்கள் மற்றும் அந்நாட்டிலிருந்து கடத்தப்படும் போதை மருந்துகளால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவில் தலா வேளாண் உற்பத்தி அதிகமுள்ள மாநிலம்.
- இந்தியாவின் இரண்டாவது மிக உயரமான அணையான பக்ரா அணை இம்மாநிலத்தில் சட்லெஜ் நதிக்கு குறுக்கே கட்டப்பட்டுள்ளது.
- இந்தியாவில் சீக்கியர்கள் பெரும்பான்மையாக உள்ள ஒரே மாநிலம் இதுதான்.

| | |
|---|---|
| தலைநகர் | சண்டிகர் |
| மாநில விலங்கு | வெளிமான் (பிளாக்பக்) |
| மாநிலப் பறவை | வடக்கு வாத்துப்பாறு (பாஸ்) |
| மாநில மரம் | சிசே மரம் அல்லது ரோஸ் வுட் |
| மாநில நதி | சிந்து |
| பரப்பு | 50,362 ச.கி.மீ. |
| மொழி | பஞ்சாபி |
| மக்கள்தொகை (2011) | 2,77,43,338 (ஆண்கள் – 1,46,39,465, பெண்கள் – 1,31,03,873) |
| பத்தாண்டு மக்கள் வளர்ச்சி (2001–2011) | 13.9 சதவீதம் |
| மக்கள் நெருக்கம் ச.கி.மீ. | 551 |
| ஆயிரம் ஆண்களுக்கு | 895 பெண்கள் |
| எழுத்தறிவு | 75.8 சதவீதம் (ஆண்கள் – 80.4%, பெண்கள் – 70.7%) |
| லோக்சபா இடங்கள் | 13 |
| ராஜ்யசபா இடங்கள் | 7 |
| சட்டமன்ற இடங்கள் | 117 |

## பீகார்

- புத்தர் ஞானம் பெற்ற கயாவும் மகாவீரர் பிறந்த வைசாலியும் இம்மாநிலத்தில்தான் அமைந்துள்ளன.
- 1600 வருடங்களுக்கு முன்பு ஏற்படுத்தப்பட்ட மிகப்பழைமையான பல்கலைக்கழகமான நாளந்தா பல்கலைக்கழகம் இம்மாநிலத்தில்தான் அமைந்திருந்தது. அதன் எச்சங்கள் யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரிய சின்னங்கள் பட்டியலில் 2016 ஆகஸ்டில் இணைக்கப்பட்டுள்ளன.
- பீகாரில் முழு மதுவிலக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

CHANDRU MATHS

| | |
|---|---|
| தலைநகர் | பாட்னா |
| மாநில விலங்கு | இந்திய எருமை (மித்துன்) |
| மாநிலப் பறவை | வீட்டுச் சிட்டுக்குருவி (ஹவுஸ் ஸ்பேரோ) |
| மாநில மரம் | அரச மரம் |
| பரப்பு | 94,163 ச.கி.மீ. |
| மொழி | ஹிந்தி |
| மக்கள் தொகை (2011) | 10,40,99,452 (ஆண்கள் – 5,42,78,157, பெண்கள் – 4,98,21,295) |
| பத்தாண்டு மக்கள் வளர்ச்சி (2001–2011) | 25.4 சதவீதம் |
| மக்கள் நெருக்கம் ச.கி.மீ. | 1106 (மாநிலங்கள் அளவில் இந்தியாவிலேயே மிக அதிகம்) |
| ஆயிரம் ஆண்களுக்கு | 918 பெண்கள் |
| எழுத்தறிவு | 61.8 சதவீதம் (ஆண்கள் – 71.2%, பெண்கள் – 51.5%) |
| லோக்சபா இடங்கள் | 40 |
| ராஜ்யசபா இடங்கள் | 16 |
| சட்டமன்ற இடங்கள் | 243 |

## மகாராஷ்டிரம்

- இம்மாநில எல்லையிலுள்ள நவாப்பூர் இரயில்வே நிலையம் பாதியளவு மகாராஷ்டிரத்திலும் பாதியளவு குஜராத்திலும் அமைந்துள்ளது.
- இந்திய அளவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) அடிப்படையில் மிகப்பெரிய முதல் மாநிலம் இதுதான்.
- இம்மாநிலத் தலைநகரான மும்பை இந்தியாவின் வர்த்தகத் தலைநகரம் என்றழைக்கப்படுகிறது.
- மகாராஷ்டிர மாநிலத்தில் வசிக்கும் யூதர்கள் சிறுபான்மையினராக அறிவிக்கப்பட்டுள்ளனர்.
- இந்தியாவின் தொழிற்சாலை சக்தி மையம் என்றழைக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| தலைநகர் | மும்பை (கோடைகாலம்)<br>நாக்பூர் (குளிர்காலம்) |
| மாநில விலங்கு | பெரிய அணில் |
| மாநிலப் பறவை | பச்சை புறா |
| மாநில மரம் | மாமரம் |
| பரப்பு | 3,07,713 ச.கி.மீ. |
| மொழி | மராத்தி |
| மக்கள் தொகை (2011) | 11,23,74,333 (ஆண்கள்–5,82,43,056, பெண்கள்–5,41,31,277) |
| மக்கள் நெருக்கம் ச.கி.மீ. | 365 |
| பத்தாண்டு மக்கள் வளர்ச்சி (2001–2011) | 16 சதவீதம் |
| ஆயிரம் ஆண்களுக்கு | 929 பெண்கள் |
| எழுத்தறிவு | 82.3 சதவீதம் (ஆண்கள் – 88.4% ; பெண்கள் – 75.9%) |
| லோக்சபா இடங்கள் | 48 |
| ராஜ்யசபா இடங்கள் | 19 |
| சட்டமன்ற இடங்கள் | 288 |
| சட்ட மேலவை இடங்கள் | 78 |

## மணிப்பூர்

- இம்மாநிலத்திலுள்ள லாம்ஜாவோ தேசியப் பூங்காவானது உலகளவில் நீரில் மிதக்கும் ஒரே தேசியப் பூங்காவாகும்.
- ஜவஹர்லால் நேருவால் இந்தியாவின் அணிகலன் எனப் புகழப்பட்ட மாநிலம்.

CHANDRU MATHS